1981 மே 13]

திருவில்லிபுத்தூர் கான்வெண்ட் பள்ளிக்கான விளையாட்டுத்திடல்

*வினா எண் 1083—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் நகர் கான்வென்ட், பள்ளிக்கூடத்தின் விளையாட்டுத் திடலின் நடுவில் உள்ள அரசு நிலத்தை மேற்படி பள்ளிக்கு விளையாட்டு இடத்திற்காக அரசு குத்தகைக்கு கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, இந்த இடம் 1951 ஆம் ஆண்டு 18.50 காசுக்கு ரங்கப்ப நாயுடுவுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டது. வாடகைக்குக் கொடுக்கிறபோதே நிலத்தை விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். அரசு தேவைப்பட்டால் திருப்பி எடுத்துக் கொள்ளும் என்று ஆணையிட்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் கான்வென்ட் பள்ளி இருக்கின்றது. 2 ஏக்கருக்கும் அதிகமாக விளையாட்டுத் திடல் இருக்கின்றது. அதற்கு நடுவில் 37 சென்ட் அரசாங்கப் புறம்போக்கு நிலம் இருக்கின்றது. அந்த இடத்தில் தீ அணைப்பு நிலையம் வருவதாக இருந்தது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரும் விஜயம் செய்தார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் விஜயம் செய்தார்கள். அந்த இடத்தை கான்வென்ட் பள்ளிக்கு ஜாரி செய்வதாகச் சொன்னார்கள். அந்த நிலத்தை இப்போது குத்தகைக்கு விடுவதற்கு அரசு முயற்சி செய்கின்றதா அல்லது பட்டா கொடுப்பதற்கு முயற்சி செய்கின்றதா? அல்லது விலைக்குக் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அரசு எந்தவிதமான முயற்சியையும் செய்யவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த அரசு எந்த முயற்சியையும் எடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்தக் கேள்வியை எதற்காகப் போட்டேன் என்றே எனக்குத் தெரியவில்லை. அந்தப் பள்ளி தமிழ்நாட்டிலேயே முதல் தரமாக இருக்கிற காரணத்தால் அந்தப் பள்ளிக் கூடத்திற்கு அந்த இடத்தைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் எப்போது வாடகைக்குக் கொடுக்கப்பட்டது என்றால் 1951 ஆம் ஆண்டு. அந்த நாயுடு இப்போது இல்லை. அவர் இறக்கிறபோதே 1963 ஆம் ஆண்டு அந்தப் பள்ளிக்கு அரசு நிபந்தனைக்கு விரோதமாக வாடகைக்கு விட்டு விட்டார்கள். அது தவறு என்று சொல்லி வருவாய்த் துறை அதிகாரிகளை அதை ரத்து செய்யும்படி சொல்லிஇருக்கிறோம்,

இந்த அவையின் மூலமாக வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு சொல்லிக்கொள்வேன். விரைவிலே இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை உடனே ரத்து செய்ய வேண்டும். அந்த முயற்சியில் வருவாய்த்துறை ஈடுபடவேண்டும். அந்த இடம் பள்ளிக்குத் தேவைப்படுவதால்—குறைந்த இடம் தான், நான் நேரிலே பார்த்திருக்கிறேன்—விளையாட்டு மைதானத்திற்குத் தேவைப்படுவதால், அதை உடனே ஆர்ஜிதம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வருவாய்த் துறை அதிகாரிகள் விரைவிலே எடுக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேலவையில் இருப்பதால், வினா எண்கள் 1084 முதல் 1086 வரை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

கும்பகோணம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கான குடியிருப்புகளைப் புதுப்பிக்கும் திட்டம்

வினா எண் 1087—*திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகராட்சியில் துப்புரவுத் தொழில் செய்யும் நகர சுத்தி தொழிலாளர்கள் வசிக்கும் பழைய மீன் மார்க்கெட் காலனி குடியிருப்புகளைப் புதுப்பித்து வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில் கட்ட திட்டமிட்டுள்ள திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) நிதி பற்றாக்குறை நிலையின் காரணமாக குடிசை மாற்று திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் கோவை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டால் போதும் என்றும், இப்பணி ஏனைய வெளியூர் மாவட்டத் தலை நகரங்களுக்கும், சிறு நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, கும்பகோணம் பழைய மீன் மார்க்கெட் பகுதியில் குடிசை மாற்றும் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 72 குடியிருப்புகள் ரூ 7.035 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்குரிய திட்டம் தற்போது செயல்படுத்துவதற்கில்லை.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற நோக்கத்தைப் பார்க்கிற போது மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இப்படிப்பட்ட நகர சுத்தித் தொழிலாளர்களுக்கான வீடுகள் கட்டும் பணி செய்யப்பட்டு, அதற்கு அடுத்தபடியாகத்தான் நகரத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு கட்டிக்கொடுக்க முடியும் என்று தெரிகிறது. மாண்புமிகு